# இந்தியா கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கு நன்றி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

**சென்னை, ஏப். 19–**

**நாடாளுமன்ற வாக்கெடுப்பில், தொகுதி மறுவரையறை சட்டமுன்வடிவைத் தோல்வியடையச் செய்ததைத் தொடர்ந்து, கழகத்தலைவரும் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள், இந்திய அளவிலான எதிர்க் கட்சித் தலைவர்களுக்கு நன்றி தெரிவித்து, சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவு வருமாறு:**



**இந்தியா கூட்டணித் தலைவர்கள் அனைவருக்கும் நன்றி!**

பா.ஜ.க. அரசு எந்தக் கலந்தாலோசனையும் கருத்தொற்றுமையும் இல்லாமல் திணிக்கப் பார்த்த தொகுதி மறுவரையறை சட்டமுன்வடிவு தொடர்பான நம் கவலைகளை வெளிப்படுத்திப் பேசிய மாண்பு மிகு மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் சகோதரர் ராகுல் காந்தி அவர்களுக்கு என் நன்றி.

மேலும், காங்கிரஸ் நாடாளுமன்றக் கட்சித் தலைவர் திருமதி. சோனியா காந்தி அம்மையார், காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, சிபிஐ தேசிய பொதுச்செயலாளர் டி.ராஜா, தெலங்கானா மாநில முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி, கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா, மேற்கு வங்க முதலமைச்சர் செல்வி மம்தா பேனர்ஜி, சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ், தேசியவாத காங்கிரஸ் கட்சித் தலைவர் சரத் பவார், ராஷ்டிரிய ஜனதா தளத் தலைவர் லாலு பிரசாத் யாதவ், ஜார்க்கண்ட் மாநில முதலமைச்சர் ஹேமந்த் சோரன், ஜம்மு காஷ்மீர் முதலமைச்சர் திரு. ஒமர் அப்துல்லா, ஆம் ஆத்மி கட்சித் தலைவர் அர்விந்த் கேஜ்ரிவால், சிவசேனா (UBT) தலைவர் உத்தவ் தாக்கரே, பிஜு ஜனதா தளத் தலைவர் நவீன் பட்நாயக், சிரோமணி அகாலி தளத் தலைவர் சுக்பிர் சிங் பாதல் உள்ளிட்ட அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் எனது நன்றிகள்.

நம்மை வடக்கு – தெற்கு எனப் பிளவுபடுத்தி, பலவீனப்படுத்தி, இந்திய அரசியல் வரைபடத்தையே தங்களுக்குச் சாதகமான முறையில் மாற்றியமைக்கப் பார்த்தார்கள். ஆனால் இந்தியா ஒன்றுபட்டு நின்றது, பா.ஜ.க.வின் சூழ்ச்சியை வென்றது! இது தொடக்கம் மட்டுமே!

இனிவரும் நாட்களில் பா.ஜ.க. பெறும் அடி ஒவ்வொன்றும் இன்னும் பலமாக இருக்க வேண்டும். அதற்கு, எதிர்க்கட்சிகளான நாம் அனைவரும் இதே போல தொடர்ந்து ஓரணியில் நிற்க வேண்டும்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டுப் பற்றைப் பற்றி எங்களுக்கு யாரும் பாடம் எடுக்கத் தேவையில்லை!

## நாடாளுமன்றத்தில்–பா.ஜ.க. எம்.பி.யை வெளுத்து வாங்கிய ஆ. இராசா!

புதுடில்லி, ஏப்.19–

நாடாளுமன்ற மக்களவையில் தொகுதி மறுவரையறை மசோதா எதிர்க் கட்சிகளின் கடும் எதிர்ப்புகளுக்கு இடையே நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டது.

**மறுவரையறை சட்ட மசோதா**

நாடாளுமன்ற சிறப்பு கூட்டத் தொடர் 16.4.2026 அன்று தொடங்கியது. மக்கள் தொகை அடிப்படையில் நாடாளுமன்ற, சட்டமன்றத் தொகுதி களை மாற்றியமைக்கும் பொருட்டு தொகுதி மறுவரையறை சட்ட மசோதாவை இந்த கூட்டத் தொடரில் ஒன்றிய அரசு நிறைவேற்ற வுள்ளது. இதற்கான விவாதம் இரு அவைகளிலும் நடைபெற்றது. தொகுதி மறுவரையறை செய்தால் நாடாளுமன்றத்தில் 543 என இருக்கும் உறுப்பினர்கள் எண்ணிக்கை 850 ஆக உயரும் என சொல்லப்படுகிறது.

அதேசமயம் தென் மாநிலத்தின் பிரதிநிதித்துவம் இதனால் குறையும் எனவும் கூறப்படுகிறது. அதனால் தென் மாநிலங்களில் தொகுதி மறுவரையறை விசயத்திற்கு கடும் எதிர்ப்பு நிலவுகிறது. குறிப்பாக தமிழ்நாடு அரசு ஆட்சேபனை தெரிவித்துள்ளது. கூட்டத் தொடரில் கருப்பு உடை அணிந்து தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர். அதன் எதிரொலியாக தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் தொகுதி மறுவரையறை தொடர்பான மசோதா நகலை எரித்தும், வீடுகளில் கருப்புக் கொடி கட்டியும் தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்தனர்.



இதற்கிடையில், “மக்களவையில் பெங்களூரு தெற்குத் தொகுதியைச் சேர்ந்த பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர் தேஜஸ்வி சூர்யா பேசுகையில்,

“மக்கள்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தியுள்ள தெற்கு மற்றும் சிறிய மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு தற்போது முன்மொழிந்துள்ளதை விட சிறந்த இடங்கள் கிடைக்காது. தொகுதி மறுவரையறைக்குப் பிறகு தென் மாநிலங்களுக்கு அதிக இடங்கள் கிடைக்கும். இதை விட சிறந்த ஒப்பந்தம் கிடைக்காது. தொகுதி மறுவரையறையை ஒரு பாதகமாகப் பார்க்கக் கூடாது” என்று தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர், தொகுதி மறுவரையறை தொடர்பாக தமிழ்நாட்டில் திமுக நடத்தும் போராட்டங்கள் நாடகம் என விமர்சித்தார். மசோதாக்கள் குறித்து மக்களைத் தவறாக வழிநடத்த எதிர்க் கட்சிகள் திட்ட மிட்ட பிரச்சா ரத்தை மேற்கொள்கிறது.

கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரையிலும் தேசிய ஒருமைப்பாட்டையே நாங்கள் ஆதரிக்கிறோம். ஆனால் பிரிவினைவாத மொழியில் பேசும் தி.மு.க.வின் அரசியலை எதிர்க்கிறோம். அவர்களை நிராகரிக்கிறோம் என்று குற்றம் சாட்டினார்.

**எங்களுக்கு பாடம் நடத்த வேண்டாம்**

அவர் பேசியதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் பேசிய தி.மு.க. எம்.பி., ஆ.ராசா, “1971 ஆம் ஆண்டு பாகிஸ்தான் போர் தொடுத்த போது நாட்டைக் காக்க ரூ.6 கோடி நிதி கொடுத்தோம். இது மற்ற மாநிலங்களை விடவும் அதிகம். 1999 ஆம் ஆண்டு வாஜ்பாய் பிரதமராக இருந்த போது கார்கில் போருக்காக கலைஞர் தலைமையிலான அரசு ரூ.100 கோடி கொடுத்தது.

நாங்களா பிரிவினை அரசியல் செய்கிறோம்?

நாட்டுப்பற்றைப் பற்றி அவர் எங்களுக்கு பாடம் எடுக்கத் தேவையில்லை.

நாங்களும் தேச உணர்வுக்கு ஆதரவாகவே நிற்கிறோம். ஒரே விஷயம் என்னவென்றால் நாங்கள் தனித்த அடையாளத்துடன் இருக்க விரும்புகிறோம். நீங்கள் இந்தி, சமஸ்கிருதத்தை திணிக்கும்போது அதை எதிர்க்கிறோம். மாநில சுயாட்சிக்கு மரியாதை கொடுக்காத போது அதை எதிர்க்கிறோம்”

இவ்வாறு ஆ.ராசா எம்.பி. காட்டமாக பதில் அளித்தார்.

# வெற்றியை கழகத்தினர் கொண்டாட வேண்டும்!

# ‘தொகுதி மறுவரையறை மசோதா’ தோல்வி, தி.மு.க.வின் வெற்றிக்கு அச்சாரம்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

*சென்னை, ஏப்.19- தொகுதி மறுவரையறை விவகாரத்தில் மோடியும், அமித்ஷாவும் தோல்வியடைந்து விட்டனர் என்றும் இந்த வெற்றியை கழகத்தினர் கொண்டாடட* **வேண்டும் என்றும் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.**



அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களை சந்தித்த கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, தொகுதி மறுவரையறை மசோதா தோல்வியடைந்திருப்பது தி.மு.க. வின் வெற்றிக்கு அச்சாரம் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார். தமிழ்நாட்டுக்கும், தென்னக மக்களுக்கும் துரோகம் செய்ய முயன்ற ஒன்றிய அரசுக்கு தோல்வி கிடைத்துள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எடுத்த முயற்சிக்கு மாபெரும் வெற்றி கிடைத்துள்ளது.

நயவஞ்சகத்துடன் மோடி அரசால் கொண்டு வரப்பட்ட மசோதா முறியடிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட ஆர்.எஸ். பாரதி, இந்த மசோதா தோல்வி அடைந்தது. இதனை வெற்றி விழாவாக கழகத்தினர் கொண்டாட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இதனிடையே, ஒன்றிய பா.ஜ.க. அரசின் தொகுதி மறுவரையறை மசோதா மக்களவையில் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க.வினர் பட்டாசு வெடித்து கொண்டாடினர். பட்டாசு வெடித்து, இனிப்புகளை வழங்கியும் தி.மு.க. வினர் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

## கழகத் துணைப் பொதுச் செயலாளர்

# கனிமொழி கருணாநிதி எம்.பி.



## தேர்தல் பிரச்சாரச் சுற்றுப் பயண விபரங்கள் (நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர்)

**19.04.2026 (ஞாயிற்றுக்கிழமை)**

| நேரம் | இடம் |
|---|---|
| 10:00 AM | **நாகப்பட்டினம் தொகுதி -** நெல்லுக்கடை மாரியம்மன் கோயில் எதிர்புறம் |
| 12:00 PM | **திருத்துறைப்பூண்டி தொகுதி -** ஆலத்தம்பாடி கடைத்தெரு |
| 04:00 PM | **திருவாரூர் தொகுதி -** காப்பணாமங்கலம் |
| 05,00 PM | **நன்னிலம் தொகுதி -** கோவிந்தக்குடி |
| 06,00 PM | **திருவையாறு தொகுதி -** காந்தி சிலை, திருக்காட்டுப்பள்ளி |

# தேர்தல் தொகுதிப் பார்வையாளர் நியமனம்!

## (12வது பட்டியல்)

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்கும் வகையில் முதற்கட்டமாக கீழ்க்கண்டவாறு சட்டமன்றத் தொகுதிகளின் பார்வையாளர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| சட்டமன்றத் தொகுதி | பார்வையாளர் |
|---|---|
| அவினாசி | கார்த்திகேய சிவசேனாபதி |

**குறிப்பு : ஏற்கனவே தொகுதி பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டவர்களுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 17.04.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# செ. குப்புசாமி

## ஏப்ரல் 19 (2013)



**தொ.மு.ச. பேரவைத் தலைவராக 1977ஆம் ஆண்டு முதல் கடைசிவரை சிறப்புற பணியாற்றியவர். 1998ஆம் ஆண்டு முதல் மூன்று முறை நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.**

**இரயில்வேயில் பணியாற்றியபோது எஸ்.ஆர்.எம்.யூ. தொழிற்சங்கத்தின் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.**

**பின்னர் ரயில்வே பணியிலிருந்து விலகி முழுநேர அரசியல்வாதியாகவும், தொழிற்சங்கவாதியாகவும் பணியாற்றத் தொடங்கியது முதல் கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறை சென்றார். மிசா கைதியாக ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தார்.**

**தலைமை கழகத்தில் தலைமை நிலைய செயலாளராக 15 ஆண்டுகாலம் பணியாற்றி கழகத் தலைவர் கலைஞரின் பாராட்டினைப் பெற்றவர். உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினராகவும், முரசொலி அறக்கட்டளை உறுப்பினராகவும் பணியாற்றினார்.**

**இவரது கழகப் பணியினைப் பாராட்டி சிறப்பிக்கும் வகையில் தலைமைக் கழகத்தின் சார்பில் தலைவர் கலைஞர் அவர்கள் முப்பெரும் விழாவினில் “அண்ணா” விருதினை வழங்கி சிறப்பித்தார்.**

**மறைகின்ற நாள் வரை, கழகம், கழகம், கழகம் என்றே பாடுபட்ட மறக்க முடியாத மாமனிதர் தான் மறைந்த நண்பர் செ.குப்புசாமி. அவர் மறைந்தாலும், கழகம் இருக்கின்ற வரையில், தொ.மு.ச. பேரவை இருக்கும் வரையில் செ. குப்புசாமியின் நினைவுகள் நீடிக்கும்” என தலைவர் கலைஞர் இரங்கல் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## கூட்டணிக் கட்சி வேட்பாளர் வன்னி அரசுக்கு – பானை சின்னத்திற்கு

# திண்டிவனம் நகர் - 14 வது வார்டு பள்ளிவாசலில் வாக்கு சேகரிப்பு!

## வார்டு செயலாளர் கே.ராஜேந்திரன் தலைமை!

*திண்டிவனம், ஏப். 19 -*

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வி.சி.க. சார்பில் போட்டியிடும் திண்டிவனம் (தனி) தொகுதி வெற்றி வேட்பாளர் வன்னி அரசுக்கு பானை சின்னத்திற்கு திண்டிவனம் நகரம் செஞ்சி சாலையில் அமைந்துள்ள மதினா பள்ளிவாசலில் 14 வது வார்டு கிளைக் கழகச் செயலாளர் கே.ராஜேந்திரன் தலைமையில் வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எம்.எல்.பி. கோபிநாத், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி ந.ப.மனோகரன், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் எஸ்.விஜயராகவன், பொறியாளர் அணி அமைப்பாளர் சீ.சரவணன், ஆடிட்டர் பிரகாஷ், கழக ராஜேந்திரன், மேஸ்திரி என். ராஜேந்திரன், எம்.தஸ்தகீர், ஆர்.சலீம்கான், என்.ராஜசேகரன், என்.முகமது இலியாஸ் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள் வடிவேல், மகா, அருள், ஏழுமலை, சுந்தர், ராஜா சேகர், ராஜவளவன் மற்றும் பலர் கலந்து கொண்டு பானை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.



மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வி.சி.க. சார்பில் போட்டியிடும் திண்டிவனம் (தனி) தொகுதி வெற்றி வேட்பாளர் வன்னி அரசுக்கு பானை சின்னத்திற்கு திண்டிவனம் நகரம் செஞ்சி சாலையில் அமைந்துள்ள மதினா பள்ளிவாசலில் 14 வது வார்டு கிளைக் கழகச் செயலாளர் கே.ராஜேந்திரன் தலைமையில் எம்.எல்.பி.கோபிநாத், ந.ப.மனோகரன், எஸ்.விஜயராகவன், சீ.சரவணன், ஆடிட்டர் பிரகாஷ், கழக ராஜேந்திரன், மேஸ்திரி என்.ராஜேந்திரன், எம்.தஸ்தகீர், ஆர்.சலீம்கான், என்.ராஜசேகரன், என்.முகமது இலியாஸ் மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள் வடிவேல், மகா, அருள், ஏழுமலை, சுந்தர், ராஜா சேகர், ராஜவளவன் மற்றும் பலர் கலந்து கொண்டு பானை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.